சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 22/2023

2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 நாள் RW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர். திரு.சுந்தரேசன் நாள் 10.12.2024
த /பெ. ஆறுமுகம்

வயது. தொழில்

கிராமம். வட்டம்.

**2ம் எதிர்மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

1. நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணி புரிந்து வருகிறேன். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எங்கள் நிறுவனம் எனக்கு வழங்கிய அனுமதிக் கடிதம் **எ.ம.சா.ஆ.1.** 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரின் வாகன ஓட்டுநருக்கு அனுப்பிய வழக்கு அறிவிப்பின் அலுவலக நகல் **எ.ம.சா.ஆ.2.** அவர்கள் அதனை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (எண்ணம் 2) **எ.ம.சா.ஆ.3.** 1ம் எதிரமனுதாரர் வாகனத்திற்க நாங்கள் வழங்கிய நிபந்தனையுடன் கூடிய காப்பீடு **எ.ம.சா.ஆ.4.** மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2. எங்கள் நிறுவனத்தில் தரப்பட்ட எங்கள் விசாரணை அதிகாரியின் ஆய்வறிக்கையை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு அந்த ஆய்வறிக்கையை படித்துப் பார்த்துவிட்டு தான் வந்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் கங்காதரன் மீது மதுராந்தகம் காவல் நிலையத்தில் விபத்து சம்மந்தமான

குற்ற வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கின் இறுதி அறிக்கையை நான் பார்த்துள்ளேன். குற்ற இறுதி அறிக்கையில் அந்த வாகன ஓட்டுநர் மீது ஓட்டுநர் உரிமமம் இல்லாமல் வாகனம் ஓட்டியதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றாலும், நஷ்ட ஈடு கொடுக்கக் கூடாது என்பதற்காக ஓட்டுநர் உரிமம் இல்லையென்று தவறாக கட்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் முறையாக எங்கள் நிறுவனத்தால் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதால் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. மனு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.